Registered as a Newspaper

செல்லையா
சிவபாதலிங்கம்
வைரகல் நகை
வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்செய்து
கொடுக்கப்படும்.

# உதயன்

விலை
ரூ2/50

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA.
T: Phone: 23794

சுடர்: 4 சுக்கில ஞு ஆடி மீ 22உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 3 (06 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 209

# அமைச்சரவைக் கூட்டம் நாளை; பின்னரே இலங்கையின் பதில்!

## புதுடில்லிப் பேச்சுக்கள் குறித்து கதிர்காமத்தில் பிரேமாவுக்கு விளக்கம்

கொழும்பு, ஆகஸ்ட் 6

புதுடில்லியில் ஏழுநாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்தியத் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்து நாளை இலங்கை அமைச்சரைவக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும், அதன்பின்னரேஇலங்கை அரசின் பிரதிபலிப்பு (பதில்) வெளியாகும் என்றும் கொழும்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து ஜனதிபதி பிரேமதாஸாவுக்கு நேற்றுக் காலையில் விளக்கமளிக்கப்பட்டது.

புதுடில்லிப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு இலங்கைப் பிரதிநிதிகள் குழு நேற்று அதிகாலை கொழும்பு வந்து சேர்ந்தது. தூதுக்குழுவினர் இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களைப் பதில் வெளிவிவகார அமைச்சரும், இந்திய உதவித் தூதுவரும் வரவேற்றனர்.

நேற்றுக் காலையில் ஜனாதிபதி பிரேமதாச கதிர்காமத்தில் தங்கியிருந்ததால் அவரை அங்கு சந்தித்துப் பேசுவதற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 6

கல்வியங்காட்டைச் சேர்ந்த ஆறுமுகம் கேசவன் (வயது15) என்ற இளைஞர் திருநெல்வேலிப் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலத்தை அமைதிப்படையினர் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். (உ-10)

## வாகனங்களுக்கு தடை

தாளையடி ஆகஸ்ட் 6

தாளையடி அமைதிப்படை முகாமுக்கு முன்னால் வாகனங்கள் செல்வதற்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (உ 144)

## இ. தொ. கா. பணிப்பாளர் பசறையில் சுட்டுக்கொலை

கொழும்பு. ஆக. 6

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பணிப்பாளர் ஒருவர் நேற்று முன்தினம் பசறையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் எஸ் சின்னத்துரை என அடையாளம் காணப்பட்டது.

தெற்கில் கடந்த சில தினங்களில் இடம்பெற்ற மேலும் சில வன்செயல் சம்பவங்கள் வருமாறு:-

★ கடுகண்ணாவையில் மூன்று உப தபாற் கந்தோர்கள் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டன.

★ களனி பல்கலைக்கழகத்திலிருந்து தீவிரவாதிகளுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முனியப்பர் கோயிலுக்கு செல்வதற்கு அனுமதி

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலயத்திற்கு இன்று முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பொதுமக்கள் சென்று வழிபாடுகள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இங்கு பூஜைகள் நடைபெற்று வருகிறபோதிலும் பொதுமக்கள் செல்லுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

தற்போது கோயில் சுற்றுடல் பகுதிகள் அனைத்தும் புல்டோசர்கள் மூலம் துப்பரவு பண்ணப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிமுதல் 12 மணிவரை பொதுமக்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும்—

படையினர் முகாமிட்டுள்ள வீதிகள் வழியே பொதுமக்கள் கோவிலுக்கு செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## சுன்னாகம் மின்விநியோகம் தடைப்படும் ஆபத்து'

### 'ஹெவி டீசல்' கையிருப்பு குறைகிறது

சுன்னாகத்திலிருந்து ஜெனரேட்டர்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மின் விநியோகமும் தடைப்படும் அபாயம் தொடர்ந்து நிலவுவதாக இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜெனரேட்டர்களுக்குத் தேவையான 'ஹெவி டீசல்' பற்றாக்குறை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டிருப்பதாக அவர் சொன்னார்.

தற்போது கையிருப்பில் உள்ள 'ஹெவி டீசல்' ஒரு சில தினங்களுக்கு மட்டுமே போதுமானது என்றும் அவர் கூறினார்.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய நாளொன்றிற்கு 13 ஆயிரம் லீற்றர் 'ஹெவி டீசல்' பாவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அண்மையில் இங்கு ரயில் மூலம் எடுத்து வரப்பட்ட 26 ஆயிரம் லீற்றர் 'ஹெவி டீசலும்' மேலும் இரு தினங்களுக்கு பாவிக்க மட்டுமே போதுமானது என்றும் அவர் சொன்னார். (உ-9)

## 400 தொண்டர் ஆசிரியர்கள் மட்டுநகரில் உண்ணாவிரதம்

தொண்டர் ஆசிரியர்கள் நானூறு பேர் நேற்று மட்டக்களப்பு காந்தி சிலைக்கு அருகில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் திட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனக் கோரியே அவர்கள் இந்த அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

குழுக்களாகப் பிரிந்து சுழற்சி முறையில் உண்ணாவிரதத்தை தொடர்ந்து மேற்கொள்ள அவர்கள் முடிவு செய்திருக்கின்றனர். (உ-21)

## பயிலுநர் ஆசிரியர் பதவி:

## 10 ஆயிரம் விண்ணப்பங்கள் இதுவரை கிடைத்துள்ளன

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிக்குக் கடந்த வெள்ளிக்கிழமை வரை பத்தாயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆகும்.

யாழ்: கல்வித் திணைக்களத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பங்களை பரிசிலனை செய்து வருகிறார்கள்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய உறவை முறித்து இலங்கை ஐ. நா. செல்லும்

## பிரேமாவின் மாற்றுவழிகளில் இது ஒன்று!

புதுடில்லி, ஆக 6

புதுடில்லியில் பேச்சுக்கள் பலன் தராவிட்டால் சில மாற்று வழிகளை இலங்கை ஜனாதிபதி நாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் ஒன்று இந்தியாவுடனான இராஜதந்திர உறவை முறித்துக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிடுவது - இவ்வாறு கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுவதாக, 'இந்து' நாளிதழ் நேற்றுச் செய்தி வெளியிட்டது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் உள்ள சர்வதேச விவகாரப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். டி. முனி கடந்த வெள்ளிக்கிழமை [நேற்று முன் தினம்] ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்துப் பேசினார்.

இரண்டரை மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்புக் குறித்து வெளியிட்ட செய்தியிலேயே "இந்து" நாளிதழ் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறது.

இந்தச் சந்திப்புக் குறித்து பேராசிரியர் முனி தெரிவித்ததாவது:-

புதுடில்லிப் பேச்சுக்கள் குறித்து இலங்கை ஜனாதிபதி மகிழ்ச்சியாக இல்லை. பேச்சுக்கள் நடந்த விதம் குறித்து ஜனாதிபதி அதிருப்தி தெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

06 — 08 — 1989

ஆடி 22 — ஞாயிற்றுக்கிழமை

நக்ஷத்திரம்: அத்தம்

சுபநேரம்:

09-04 முதல் 10-34 வரை

ராகுகாலம்:

04-34 முதல் 06-04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### முச்சந்தி முரளி



மாற்று வழியளும் சுத்துமாத்து வழியளும் சனக்க வைச்சிருப்பாரோ பின்னை...!

# எழுபதுக்கும் அதிகமானோர் வல்வைப் பகுதியில் மரணம்

வல்வெட்டித்துறை, ஆக. 6

வல்வைப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதங்களில் எழுபதுக்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிய வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை வல்வைப் பகுதியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டபோது உயிரிழந்த பொதுமக்களின் சடலங்களில் ஒருபகுதி இப்பகுதி மக்களினால் அடையாளம் காணப்பட்டது.

அடையாளம் காணப்பட்டோர் விவரம் வருமாறு:-

பொலிகண்டியில்

சோதிலிங்கம் ரமேஷ்குமார் (வயது 19). விஜயரட்ணம் முரளிதரன் (வயது 19). செல்வரத்தினம் சிவமணி (வயது 39).

வல்வையில்

குமாரவேல் செல்வன் (வயது 19) - ஆதிகோவிலடி, எஸ். இராசேந்திரம் (வயது 25). அருட்பிரகாசம் ரவி (வயது 18) - பனை (இவர்கள் மூவரும் கைகள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்).

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கப்பட்டது

வல்வெட்டித்துறையில் நேற்று முன் தினம் மாலை ஊரடங்கு நீக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும் கடந்த புதன், வியாழனில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் பீதி காணப்படுகிறது.

இதனால் வீதிகளில் சனநடமாட்டமும் குறைவாகவே இருந்தது.

வல்வைப் பகுதியில் பஸ் போக்குவரத்தும் இடம்பெறவில்லை. (உ)

## கொழும்பு ரயில் யாழ். வந்தது

ஜே. வி. பி. யினரின் ஊரடங்கு காரணமாக நேற்றுமுன் தினம்வெள்ளிக்கிழமைதடைப்பட்டிருந்த யாழ்- கொழும்பு ரயில் சேவை நேற்றைய தினம் வழமை போல்நடைபெற்றது.

நேற்று மாலை தாமதமாகவே யாழ்ப்பாணத்தை வந்தடைந்த ரயிலில்மிகவும் குறைந்தளவு பயணிகளே பயணஞ் செய்தனர்.

இந்த ரயில் இன்று காலை 9 மணிக்கு மீண்டும் கொழும்புக்குச் செல்லும். (உ-6)

## நாளை முதல் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு பணிப்பு!

வடக்கு, கிழக்கில் உள்ள சகல பாடசாலைகளையும் நாளை திங்கட்கிழமை முதல் திறக்குமாறு வடக்கு, கிழக்கு மாகாணசபை பணித்திருக்கிறது.

இது தொடர்பாக மாகாணசபையின் கல்வி அமைச்சு சகல மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் உத்தரவுகளை அனுப்பியிருப்பதாக திருகோணமலையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-21)

## உடுப்பிட்டியில் ஷெல்!

வல்வெட்டித்துறை, ஆக. 6

உடுப்பிட்டியில் நேற்று முன் தினம் மாலை ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

உடுப்பிட்டி முகாம் மீது தாக்குதல் இடம்பெற்றதை அடுத்தே ஷெல் குண்டுகள் ஏவப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

அதிக ஷெல்கள் துவாளி அம்மன் கோவில் வயல்களில் விழுந்து வெடித்ததால் சேதமேதும் ஏற்படவில்லை. (உ-160)

## நல்லூர் கந்தன் உற்சவம் இன்று ஆரம்பமாகிறது

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

கோவில் வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.

அனைத்து திருவிழாக்களும் மாலை 5 மணிக்குள் நடத்தி முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 30 ஆம் திகதி தீர்த்தோற்சவமும், 31 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும்.

வருடாந்த உற்சவத்தை ஒட்டி நல்லூர் கோவிலைச் சூழவுள்ள பகுதிகளில் இரவு 9 மணி வரை மின்சார விநியோகம் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-10)

## சீனத் தலைவர் மரணம்?

பீகிங், ஆக 6

83 வயதான சீனப்பெருந் தலைவர் டெங் ஷியாஓபிங் இறந்துவிட்டார் என்று செய்தி வந்துள்ளது.

இது தவறு என்று சீன அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

திரு. ஷியாஓபிங் ஆபத்தான நிலையில் இருக்கிறார் அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதாக இன்னொரு செய்தி கூறுகிறது. (உ-எ)

## வடமராட்சி கிழக்கில் மீன்பிடிப்பதற்குத் தடை!

தாளையடி: ஆக. 6

வடமராட்சி கிழக்கில் கடலில் மீன் பிடிப்பதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் உள்ள செம்பியன்பற்று. தாளையடி, மருதங்கேணி, உடுத்துறை ஆகிய இடங்களில் உள்ள மீனவர்களே கடலில் மீன் பிடிப்பதற்குச் செல்ல வேண்டாமென கேட்கப்பட்டுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா கடற் படையினரின் ரோந்து இப்பகுதிக் கடலில் அதிகரித்துள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (உ-144)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி ஊழியர்கள்வேலைநிறுத்தம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 6

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பணிபுரியும் டாக்டர்கள் உட்பட அனைத்து ஊழியர்களும் வெள்ளிக்கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வியாழக்கிழமை இரவு ஆஸ்பத்திரியில், கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் கூட்டிச் செல்லப்பட்டு சுடப்பட்டதை ஆட்சேபித்தே வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஆண் பரிசாரகரான க. வன்னியசிங்கம் என்பவர் (48 வயது), ஆறும் இலக்க வார்ட்டில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை கூட்டிச் செல்லப்பட்டார் என்றும்-

அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் அவரது தொடையிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டதாகவும்-அறியவந்தது.

காயமுற்ற அவர் சிகிச்சைக்காக யாழ்-ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (அ-117)

## பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு ஆக. 6

ஆசிரியர் பயிற்சி இறுதிப் பரீட்சையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சைக்குரிய புதிய தமிழ்மொழிப் பயிற்சி ஆண்டு 05, புதிய கணிதப் பயிற்சி ஆண்டு 05 வெளிவந்து விட்டது. திறமைச் சித்திக்கு ஓர் வழிகாட்டி: எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (1352)

சுன்னாகத்தில் காங்கேசன் துறை வீதியில் சந்தியிலிருந்து கால் மைல் தூரத்தினுள் ஐந்தலறைகளைக் கொண்ட வீடும், ஒன்பதரைப் (9 1/2) பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு:
தொடர்பு: 82/3. நல்லூர் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (11690)

### கோழிக்குஞ்சு விநியோகம்
### Uplands Farm

(Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (09-08-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதியவும். இல. 09, கந்தையா லேன், சுன்னாகம். (புகயிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு: இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை. (1349)

## விற்பனை

முதிரை அலுமாரி தற்பொழுதுள்ள டிசைன் 26கேஜ் 9 அடி தாரம், 26கேஜ் 8 அடி தகரம். நீர்ப்பைகள், கடைக் கதவு நிலைகள், யன்னல், பழைய மரங்கள் கதிரைகள், செற்றி போன்றவை மலிவு விற்பனைக்கு உண்டு. சி. கந்தசாமி, நவாலி வடக்கு, நாச்சிமார்கோவிலடி, மானிப்பாய். (11751)

நாவற்குழி நெற்களஞ்சியம் முன்பாக நூறுயார் தூரத்தில் 6.3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 14/1A, விதானையார் வீதி, கண்டிக்குளி. (1361)

பாவித்த அலுமாரிகள் உட்பட சகல வீட்டுத் தளபாடங்கள் Fan Fridge Sumeet கிறைண்டர் மற்றும் மின்சார உபகரணங்கள், 237 சிங்கர் தையல் மெசின் Bicycle மற்றும் பல விற்பனைக்குண்டு Supeka 343, பருத்தித்துறை றேட், நல்லூர். (11763)

## வருப்புக்கள்

A/L 89, 90, 91 வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுகின்றன? மேலதிக விபரத்திற்கு நிர்வாகியைச் சந்திக்கவும். மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி கிழை, பருத்தித்துறை. (1344)

## தேவை

புதிதாக ஆரம்பித்திருக்கும் எமது றெக்கோடிங் ஸ்தாபனத்திற்கு பெண் காசாளர் தேவை குறைந்தது க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தி அடைந்திருத்தல் விரும்பத்தக்கது: விண்ணப்ப முடிவுதிகதி 20-8-89: 573, C/o Uthayan. (1362)

மானிப்பாயில் உள்ள வியாபார நிறுவனம் ஒன்றிற்கு காசாளர் தேவை. 50 வயதிற்கு மேற்பட்டோரும் 3 மைல் சுற்றுடலில் வசிப்பவராகவும் நல்ல ஆங்கில அறிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும். புதன் (9-8-89) காலை 10 மணிக்கு பின்வரும் முகவரிக்கு நேரில் வரவும். இயக்குனர் பிறீஸ்மன் கல்வி நிலையம், மானிப்பாய். (1360)

## மணமகள் தேவை

யாழ்ப்பாண இந்துவேளாள கனடாவால் வந்து நிற்கும் 34 வயது Vegetarian மணமகனுக்கும் யாழ் வேளாள கத்தோலிக்க தாரமிழந்த பின்ளைகளற்றவருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (11699)

யாழ் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவ வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது உடைய P.H.D. U S. Aயில்முடித்து கடமையாற்றுபவருக்கு (B sc) அல்லது [I.C.M.A:] மணமகள் தேவை. முழுவிபரத்துடன் தொடர்பு கொள்ளவும். சாயிமங்கள திருமண சேவை No: 32, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [11754]

யாழ்ப்பாண வேளாள 37 வயது கிறிஸ்ரியன் பட்டதாரிக்கு ஒத்துவரக்கூடிய மணமகள் தேவை, சமயம் தடையாயிராது. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (11697)

## மணமகன் தேவை

யாழ் இந்துவேளாள 1950 இல் பிறந்த யாழ்ப்பாணத்தில் அரசாங்க எழுதுவினைஞராகக் கடமை புரியும் கன்னிப் பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதகம் தொழில் விவரத்துடன் விண்ணப்பிக்கவும் 574, C/o Uthayan. [1364]

யாழ் இந்து வேளாள குடும்ப 28 வயது அரசாங்க உயர் பதவி வகிக்கும் செவ்வாய்க் குற்றமற்ற Phd படிக்கவிருக்கும் பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகிறார்கள். எஞ்சினியர், எக்கவுண்டன், அரசாங்கத்தில் உயர்பதவி, வங்கியில உயர் பதவி வகிப்பவர்கள் விரும்பத்தக்கது. சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். 571, C/o உதயன். (1355)

## MUSIC

Piano and Accordian-Lessons for Females Mrs Thomas St. Mary's Road Sillalai. (1058)

## அளவையியல் II

ஆசிரியர் கேசவன் எழுதிய 1989 ஆம் ஆண்டு ஆவணிப் பரீட்சைக்குரிய அளவையியல் வினா-விடைகளஞ்சியம் பகுதி II, யாழ்நகர் பிரபல புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் விலை ரூ 30/ (1325)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

V. K. S. FARM

நன்கு பராமரிக்கப்பட்ட 1 1/2 மாத Hyline வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், 1 1/2 மாத Goldan Comat பேட்டுக்குஞ்சுகள், 4 மாத Hyline கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் ஆகியன மொத்தமாக விற்பனைக்கு உண்டு. 1நாள் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்: No. 12, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, K. K. S. Road, (1156)

---

க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான வெளியீடு

### உயர்தர
### கணக்கியல் செய்முறைப் பயிற்சி

[கம்பனிப் பகுதிகளை உள்ளடக்கியது]

சி. யோகேஸ்வரன்

கிடைக்குமிடங்கள்:
- ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- நாயகபாலன் ஸ்ரோஸ். மானிப்பாய்

சுதுமலை மேற்கு,
மானிப்பாய். [1448]

---

வலி-கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கம்
நீர்வேலி

### வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

வலி - கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5500 வரையிலான வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கிருக்கின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம், மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 10/-உம் செலுத்தி சங்க வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் 15 - 08 - 89 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்:

-பொது முகாமையாளர்.

நீர்வேலி,
1989 - 08 - 04 (C/2950)

---

### விக்ணு டியூசன் சென்ரர்
★★★★★★★★★★★★

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

SAT & SUN 90, 91 வகுப்புக்கள்

வழமையான நேர அட்டவணையின்படி நடைபெறும்

91 பிரிவு 2
ஆரம்பம்: 06-08-89
(9.00 மணி)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள்

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. கலாதரன் |
| கணக்கியல்:- | திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகம்:- | திரு. லங்கா |
| அளவையியல்:- | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம்:- | திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| புவியியல்:- | திரு. குணராச |
| அரசியல்:- | திரு. மஃறூவ் |

முக்கிய குறிப்பு: 1 கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ஒருங்கிணைந்து போதிக்கும் ஒரே நிறுவனம்.
II மாணவர்கள் முன்கூட்டியே பதிவு செய்யவும்: (C/2945)

---

### புதிய உயர் கல்லூரி

ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.

ஆசிரிய தெரிவுக்கான போட்டிப் பரீட்சை

1. பொதுஉளச்சார்பு 2 பொது அறிவு
வகுப்புகள் ஆரம்பம்: 07 - 08 - 1989.
நேரம் காலை 8.00 மணி
(சி/3204)

---

### Chundikuli Girls' College
Dr. E. M. Thillaiyampalam
INSTITUTE

The third term for the above Institute will Commence on Wednesday 9th August 1989. New Students who wish to Register for the following courses can also come.

1. Pitman 's Shorthand, Typing & Bookkeeping
2. Home Economics - Scientific Dress Making

MACHINE EMBROIDERY, FLOWER MAKING, CAKES & ICING, GENERAL COOKERY, HANDICRAFTS, HAIR STYLES.

— PRINCIPAL.

(C/3182)

---

### 2ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி



மண்ணிற்கு:
24.10.1971

விண்ணிற்கு:
13,08 1987

### குமாரி சிவமலர் நடேசபிள்ளை

அன்பு மகளே! எம்மலரே!!
உன் மதி முகை மறைந்ததேனோ?
உன் தூய வாழ்க்கைக்கு வேகம் கொடுத்து
எங்களை துச்சமென மதித்தாயோ!
கூடும் உறவினரை கலங்கிடச் செய்தாயே!
மலரே! நீ சிவனவன் திருவடியில் மலராகிவிட்டாய்!
அதனால் தான் நீ சிவமலர் அன்றோ!
மலரே! உன் நினைவுகளை
இன்றும் நாம் தாங்குகின்றோம்,
உன் அன்பிற்காய் என்றும் நாம் ஏங்குகின்றோம்.
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் நாம் உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்!

உன் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா,
அக்கா, அண்ணாமார்,
அத்தான், அண்ணி,
பெறுமகன்மார், மருமகன்,
மருமகள்.

திருப்பதி,
புளிதுடுதீவு, 11. (1449)

---

### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்:
09 - 06 - 1958
(அரியாலை)

அமரத்துவம்:
21 08 1985
(அமெரிக்கா)

திருமதி
### சித்திராதேவி ஜெயக்குமாரன்
திதி: 06 — 08 — 1989

அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய், எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்முடன் இருந்த எங்கள் அன்புச் செல்வமே! எங்களை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உமது அன்பின் திருவுருவம் எங்கள் உள்ளத்தை விட்டு என்றும் அகலாது.

உமது பிரிவால் வாடும்
கணவர், அப்பா, அம்மா,
அண்ணா (S. சிவநேசன் A.M.P.) அண்ணி
அக்காமார், தம்பி:

(11738)

---

அந்தியகால சேவையில் புதிய நண்பன்
★ எம்பாமிங் ★ பிரேதப்பெட்டிகள்
★ ஊர்வல வாகனங்களுக்கு
எம்மை நாடுங்கள்!

### பிறைற் ஹவுஸ்

(யாகப்பர் ஆலய அருகாமை)
210, பிரதான வீதி. .. யாழ்ப்பாணம்.
(3173)

---

### வேலைவாய்ப்புகள்

★ குவைத்
கிளீனேர்ஸ் — 30 KD
(குறைந்த கட்டணத்துடன் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.)

இத்துடன் அபுதாபி, ஹொங்கொங் நாட்டிற்கான வேலை வாய்ப்புகளும் உண்டு.
விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

### மியூனிஸ்ட் என்ரபிறைசஸ்

156, 1 ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
(சி/3176)

---

### COMPUTER COURSES

Diploma in Basic Programming

### புதிய பிரிவுகள் 12-8-89 ஆரம்பம்

MODULE - I — 8. 30 A. m
MODULE - II — 10. 00 A, m

சேரும்போது செலுத்த வேண்டியது: Rs 500/-

★ ஏற்கனவே ஒதுக்கிவைக்கப்பட்ட பிரிவிற்குரிய மாணவர்கள் அனைவரும் தத்தமக்குரிய பிரிவுகளில் உடனடியாகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ மல்லாகம் கிளையில் 11-8-89, 4 30 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகும். ஏற்கனவே படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மல்லாகம் IDP காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

**IDP COMPUTER CENTRE**

342, K. K. S Road, JAFFNA.
(C/3165)

---

### அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு
### முடிவுகள்

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவன பாதுகாப்பு உத்தியோகஸ்தர் நலன்புரிச் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

**1ஆம் பரிசு - றைஸ் குக்கர்**
★ அதிஷ்ட எண் — 963
பரிசு பெறுபவர்: திரு. ஜெயசிங், லொறி இல 41/9115, யாழ்ப்பாணம்.

**2ஆம் பரிசு - சுவர் மணிக்கூடு**
★ அதிஷ்ட எண் — 86
பரிசு பெறுபவர்: திரு. நேசன், குடிசார் பகுதி, லங்கா சீமெந்து நிறுவனம், காங்கேசன்துறை.

**3ஆம் பரிசு - மின் அடுப்பு**
★ அதிஷ்ட எண் — 242
பரிசு பெறுபவர்: திரு. K. K. சுந்தரம், லொறி இல 27/2761, காரைநகர்.

**ஆறுதல் பரிசுகள் - 7 எவர்சில்வர் தட்டுக்கள்**

1: அதிஷ்ட எண் — 169
பரிசு பெறுபவர்: திரு ஜெயவீரசிங்கம், குருநாகல்

2. அதிஷ்ட எண் — 73
பரிசு பெறுபவர்: V. K. சிவலிங்கம், கல்லுடைக்கும் பகுதி, ல. சீ. நிறுவனம், காங்கேசன்துறை

3: அதிஷ்ட எண் — 613
பரிசு பெறுபவர்: அஜிதா ரட்ணராஜா, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.

4: அதிஷ்ட எண் — 581
பரிசு பெறுபவர்: திருமதி S. சிவராஜா, வரைஞர் பகுதி. ல. சீ. நிறுவனம், காங்கேசன் துறை.

5: அதிஷ்ட எண் — 930
பரிசு பெறுபவர்: யாழினி மரியதாஸ், சென்றீற்று தேவாலய வீதி, இளவாலை.

6. அதிஷ்ட எண் — 445
பரிசு பெறுபவர்; திரு. A. செல்வநாயகம், பாதுகாப்புபயிற்சிபிரிவு, ல. சீ. நிறுவனம், காங்கேசன் துறை.

7: அதிஷ்ட எண் — 854
பரிசு பெறுபவர்: திரு. S. சிறீநாதன், அம்பனை, தெல்லிப்பளை.

தகவல்:
பாதுகாப்பு நலன்புரிச் சங்கம் ல. சீ. நிறுவனம்
[சி-3201]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

குறள்:

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.

பொருள்:

பிறர்க்குக் கொடுத்து உதவுவதும் தான் நுகர்வதும் இல்லாதவர்க்கு மேனமேலும் பெருகிய பல கோடிப் பொருள் உண்டானாலும் பயன் இல்லை.

உதயன்

இல. 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
05 - 08 1989 த. பெ. இல. 23

## ஒடிசல் இல்லாத திட்டமா?

நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை உண்டு. இது நீண்ட நாளைய நிலைமை. பற்றாக் குறையை, முற்றாக இல்லாவிடினும் ஓரளவேனும் தீர்க்கும் பொருட்டு எழுந்துள்ளதே இருபத்தையாயிரம் பேர்களைப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டம். இது குறித்தே இப்போது பலரின் கவனமும் திரும்பியுள்ளது.

நாட்டில் வேலையற்றிருக்கும் படித்த இளைஞர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இருபத்தையாயிரம் என்பது எள்ளின் அளவினதாகும். ஆகையால் இந்த இருபத்தையாயிரம் பேர்களையும் தெரிவு செய்வது என்பது, பெரும் சிரமமான, கஷ்டமான அலுவலாகும். திட்டமிடப்பட்ட முறையில், பாரபட்சம் இல்லாத முறையில், மிகக் கவனமாகச் செய்யப்படுதல் அவசியம்.

இதுபோன்ற பெரும் எண்ணிக்கையானோரை ஆட்சேர்க்கும் போது (Mass Recuritment) தகுதியும் திறமையும் உள்ளவர்கள் வாய்ப்பு இழந்தும், அரசியல் செல்வாக்கு, அதிகாரிகள் செல்வாக்கு, லஞ்சம், "உள்ளாளும் கள்வாளுமான" ஊழல், முகமன பார்த்தல், தெரிந்தவர்களுக்கு உதவுதல் என்பன போன்ற முறைகேடுகள் மேலோங்கி திறமை இல்லாதவர்கள் நியமிக்கப்படுவதும், நடைமுறை இயல்பாகிவிட்ட ஒன்று நியமனங்கள். ஆட்சேர்ப்புகளின் இயல்பு நிலையே அவைதான் என்றாகிவிட்டது!

போட்டிப் பரீட்சை அதாவது திறமை காண் தகுதிப்பரீட்சை இல்லாமல் ஆட்சேர்க்கும் முறை வந்த பின்னரே முன்கண்ட சீர்கேடுகள் பல்கிப் பெருகின. செல்வாக்குத் தேட முடியாத வசதி குறைந்த கிராமப் பகுதி இளைஞர், யுவதிகள் பலர் திறமை இருந்தும் வேலைவாய்ப்புகளில் விடுபட்டதைக் காண முடிந்தது.

பயிலுநர் ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கு எழுத்துப் பரீட்சையும் சேர்க்கப்பட்டுள்ளது. அதில் திறமையானவர்களை, பரீட்சையில் எடுத்த புள்ளிகளின் அடிப்படையில், நியமனம் செய்ய ஏற்பாடாகி உள்ளது.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், விண்ணப்பதாரரின் கல்வித்திறமை, குடும்பப் பின்னணி, சமூக சமய ஆர்வம் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் வழங்கி, கூட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கவும் ஏற்பாடாகி உள்ளது.

புள்ளிகளின் அடிப்படையில் எழுத்துப் பரீட்சைக்குத் தெரிவு, எழுத்துப் பரீட்சையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு, நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் நியமனம் என்ற மூன்று கட்ட ஆட்சேர்ப்பு முறையாக இது அமைந்திருக்கிறது.

உதவி அரச அதிபர் பிரிவு மட்டத்தில் நியமனம், குறிப்பிட்ட பகுதியில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, எழுத்துப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுவோர் விவரம், நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுவோர் விவரம், நியமனம் செய்யப்படுவோர் விவரம் என்பனவற்றை ஒளிவு மறைவின்றிப் பகிரங்கப்படுத்துதல் ஆகியவை இங்கு சிறப்பம்சங்களாக உள்ளன.

நியமனங்களில் ஊழல்களையும், சீர்கேடுகளையும் தவிர்ப்பதற்கான கண்காணிப்புக் கேந்திரங்களாக (Check Points) இவை அமைகின்றன எனக்கொள்ளலாம்.

இதுவரை நடைமுறையில் இருந்த "கும்பலில் கோவிந்தா" என்ற ஆட்சேர்ப்பு முறையுடன் ஒப்பிடும் போது. புதிய முறை எவ்வளவோ மேலானது எனத் தோன்றுகிறது. எனினும் இதுவும் குறைபாடுகள் இல்லாத, முற்றிலும் ஒடிசல் அற்ற (Fool Proof) முறை என்றுதுணிந்து கூறமுடியாது.

எழுத்துப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவோர், நேர்முகப் பரீட்சை நடத்துவோர் ஆகிய இருசாரார்களின் மனச்சாட்சியிலும், நன்னடத்தையிலும், தனிப்பட்ட குணாம்சத்திலுமே (Personal Character) புதிய ஆட்சேர்ப்பு முறையின் வெற்றி தங்கி உள்ளது. விடைத்தாள் திருத்தல், நேர்முகப் பரீட்சை நடத்துதல் ஆகியவற்றை மீள் பரிசீலனை செய்யவும், கண்காணிக்கவும் சில வழிமுறைகள் சேர்க்கப்பட்டிருப்பின் நன்று.

புதியமுறை ஒன்று நடைமுறையாகும் போது, பல கஷ்டங்கள் தவறுகள் உண்டாகக் கூடும். பல கண்டனங்கள், முறைப்பாடுகளை எதிர்பார்த்து அவற்றைத் தவிர்க்கும் விதத்தில் இதனைக் கையாளும் அதிகாரிகள் நடந்து கொள்வதிலேயே, இத்திட்டத்தின் வெற்றி தங்கியிருக்கிறது. எல்லோருக்கும் நியாயம் வழங்கப்படுவதற்கான வழியும் பிறக்க முடியும்.

## கடற்றொழிலாளர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்

பச்சிலைப்பள்ளி, ஆக 6

உயிரைப் பணயம் வைத்து ஆழ்கடலில் தொழில் செய்யும் கடற்றொழிலாளர்கள் மக்களால் போற்றப்பட வேண்டியவர்கள்; கடற்றொழிலாளர் நலன்கருதி சங்கம் அமைத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டது வரவேற்றக்கூடியது'

எழுதுமட்டுவான் கிளாலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்த சமூக சேவையாளர் பி. மைக்கெல் மேற்கண்டவாறு கூறினார்.

சங்க இயக்குனர் திரு. வ. ம. ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பே. யேசுதாசன், த. வரதராசா உட்பட பலர் உரையாற்றினர். (த-117)

# உணவுக் களஞ்சியங்கள்
# ஒரு கோடி செலவில் புனரமைப்பு

### நாவற்குழியிலும் குருநகரிலும்

யாழ்ப்பாணம், ஆக. 6

நாவற்குழியிலும் குருநகரிலும் உள்ள உணவுக் களஞ்சியங்கள் 1 கோடி 10 லட்சம் ரூபா செலவில் மீண்டும் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக இந்தக் களஞ்சியங்கள் பெரிதும் சேதமடைந்திருந்தன.

நாவற்குழி உணவுக் களஞ்சியம் முற்றாக சேதமடைந்ததன் காரணமாக 80 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

குருநகர் களஞ்சியம் 30 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

இதற்கான வேலைகள் அனைத்தும் அடுத்த மாதம் அளவில் ஒப்பந்தக்காரரிடம் கொடுக்கப்படும் என யாழ். கட்டடத்திணைக்களப்பிரதமபொறியியலாளர் தெரிவித்தார். (த 9-10)

### நிலுவை வழங்கப்பட்டது

கொழும்பு, ஆக. 6

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியருக்கு கடந்த ஜனவரியல் இருந்து மாதம் 180 ரூபா வீதம் வழங்கப்பட வேண்டிய நிலுவை சென்ற மாதம் வழங்கப்பட்டு விட்டதாக கொழும்பில அறிவிக்கப்பட்டது.

1982 ஜனவரியில் இருந்து மாதம் 45 ரூபாவீதம் வழங்கப்படவேண்டிய நிலுவை வருகிற அக்டோபர் முதல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)

### இக்கட்டான நிலையில் ப. நோ. கூ. சங்கங்கள்

யாழ்ப்பாணம், ஆக 6

உணவு முத்திரைத் தொடரில் 4ஆவது புள்ளிகுரிய உணவுப் பொருள்களை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்கவேண்டும் என்று விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பை அடுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் இக்கட்டான நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பலவேறுபட்ட காரணங்களால் பணச்சிக்கலில் தவிக்கும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு இது மேலும் ஒரு சிக்கலை உருவாக்கியுள்ளதாக ப. நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-த-3)

### இராணுவ வீரர் மரணம்

வட்டக்கச்சி, ஆக. 6

கொக்காவில் இராணுவ முகாமில் இலங்கை இராணுவ வீரர் ஒருவர் அண்மையில் இரத்தப் பெருக்கினால் மரணமானார்.

இந்த சம்பவத்தில் மரணமானவர் ஆர். எஸ். என. வெலிவிகார (22) என்று தெரிவிக்கப்பட்டது. (த-163)

## சுழிபுரம் பகுதியில் உற்பத்தியாளர் பாதிப்பு

சுழிபுரம், ஆக. 6

சுழிபுரம் பகுதி தோட்டச் செய்கையாளர்கள் தாம் உற்பத்தி செய்த வெங்காயத்தை விற்பனை செய்ய முடியாமலும் தற்போது கிண்டியவற்றை வைத்துப பாதுகாக்க முடியாமலும் கஷ்டப்படுகின்றனர்.

சென்ற போகத்தின்போது அறுவடை செய்யப்பட்டவை தூக்கியபடியே இருக்கின்றது.

கொழும்பு கொண்டுசென்று விற்க முடியாத நிலைமை உள்ளதாலேயே இத்தேக்கம் என்று கூறப்படுகின்றது.

வயல்களில் கிண்டிவைக்கப் பட்ட விதை காய்களும் இடை இடையேபெய்த மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன. (இ-28)

சமய சந்நிதிகளில்

### வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், ஆக 6

சில்லாலை கதிரை மாதா ஆலய வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

13 ஆம் திகதி காலைத்திருப் பலியில் புது நன்மை பெறும். வைபமும் 14 ஆம்திகதிமாலை ஆராதனையில் திவ்விய நற்கருணைப் பவனியும் நடைபெறும்.

15 ஆம் திகதி காலை திருச்சுருபபவனியுடன் திருவிழா நிறைவுபெறும்.

தினமும் மாலை ஆராதனையைத் தொடர்ந்து அருட்திரு ஜெரோம்லம்பேட் அடிகளார் அருளுரை வழங்குவார். (த-9)

### மாகாண சபை வரவு-செலவு திட்டம்

திருகோணமலை ஆகஸ்ட் 6

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் நாளை 7 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட விருப்பதாக நிதி அமைச்சர் பெ. கிருபாகரன் தெரிவித்துள்ளார்

வரவு - செலவுத் திட்டவிவாதம் 8 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அவர் கூறினர் (ஒ-5)

### பதிற்கடமை

மானிப்பாய், ஆக. 06

உடுவில் கொத்தணிப் பாடசாலை அதிபர் திருமதி எஸ். குமாரசாமி மூன்று மாத லீவில் சென்றுள்ளதால் உடுவில் கொத்தணி அதிபரின் கடமைகளை உடுவில் கொத்தணி உப அதிபரும் இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபருமான திரு. எஸ். சோதிப்பெருமாள் பொறுப் பேற்று மேற்கொண்டு வருகிறார். (த-90)

### கொடியேற்றம்

யாழ்ப்பாணம, ஆக 6

யாழ்- வண்ணை கன்னதிட்டி காளியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 15 திகதி தேர்த் திருவிழாவும் 16 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (த-3)

### கற்பக விநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக 6

உடுவில் கிழக்கு கற்பக விநாயகராலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரதோற்சவமும் 16 திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (த)

### வாசகர் திருமுகம்

### பண்டத்தரிப்பு சந்தைவரிகள்

பண்டத்தரிப்புச் சந்தையில் சைக்கிள் பாதுகாப்புக்காக 50 சதம் அறவிடப்படுகின்றது. ஆனால் சைக்கிள் நிறுத்தி வைக்க இடமில்லை; சைக்கிளுக்குப் பாதுகாப்புமில்லை. ஒரு சைக்கிள் விழுந்தால் பல சைக்கிள்கள் விழும். இதனால் சைக்கிளுக்குப் பாதிப்பு ஏற்படும்.

பொருட்களுக்கான வரி நியாயமின்றி அறவிடப்படுகின்றது. உதாரணத்துக்கு முன்னர் ஒரு வாழைக்குலைக்கு ஒருரூபா வரி அறவிடப்பட்டது. இது பின்னர் வேறு காரணங்காட்டி ரூபா 2/-ஆக்கப்பட்டது. இப்பொழுது அந்தக் காரணம் இல்லை. ஆனால் வரி குறைக்கப்படவில்லை. ரூபா 10 விலைபோகும் வாழைக்குலைக்கு தரகு கூலி ரூபா 2/. ரூபா 500 விலை போகும் வெங்காயத்துக்கு நண்பர்களுக்கு வா 1ரூபா அல்லது 2 ரூபா; புதியவர்களிடம் 10ரூபாகூட அறவிடுகிறார்கள்.

சந்தைக்கு விவசாயிகள் காலை 5-15க்கே வந்துவிடுவார்கள். வரி அறவிடுவோர் வர 6 மணியாகும். சிலவேளையில் கொண்டுவந்தவர்கள் பொருட்களை விற்றுவிட்டால் அவர்கள் சோரும் வரியைக் கொடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, சந்தைக் கட்டடத்தில் அறை ஒன்று வாடகைக்கு எடுத்தவர்கடைக்கு முன்னால் சுமார் 150 சதர அடி இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு எந்தப் பொருளையும் வைக்க முடியாது. அவரிடமும் எந்த வித வரியும் அறவிடப்படுவதில்லை.

பாரபட்சமின்றி நியாயமான வரி அறவிடவும் மற்றும் ஒழுங்குகளைச் செய்யவும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

ஒரு விவசாயி
கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு

## சீர்திருத்தச் செம்மல் சிவபாதசுந்தரனார்

சைவப்பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம்பிள்ளையின் (17-1-1878 — 14-8-1953) குருபூசைத் தினத்தை ஒட்டி இக் கட்டுரை வெளியாகின்றது.

ஒரு சிறந்த ஆசிரியரின் பெருமை அவரிடம் பயின்று அறிவு நலம் பெற்று உலகம புகழத்தக்க நிலையில் உயர்ந்து விளங்கும் மாணவர்களின் மாட்சியைக் கொண்டு அளவிட்டு அறியப்படும். ஆசிரியப் பெருந்தகை புலோலியூர் சைவப் பெரியார் சு. சிவபாத சுந்தரனாரிடம் கல்வி கற்றுப பழகி அறிவாற்றலில் சிறந்தோங்கித் திகழ்ந்து புகழ் எய்திய மாணவர்கள் பற்பலராவர்.

சிறந்த ஆசிரியரே சமய, சமூக சீர்திருத்தத்தில் ஈடுபடவும் வெற்றி காணவும் வல்லவர். சைவப் பெரியார் வாழ்க்கை இந்த உண்மைக்கு உரைகல்லாகும்.

'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று தோன்றுவன எனும் எவையும் தீதாகா' என உணர்ந்து, நல்லதன் நலனும், தீயதன் தீமையும் திறன் தெளிந்து கடைப்பிடிக்கும் சால்புடையவராகத் திகழ்ந்தார். சாதிச் செருக்கு, மூடப பழக்கவழக்கங்கள் முதலியவற்றை ஒழித்து, நல்ல பகுத்தறிவுக் கொள்கையும், சீர்திருத்தச் செந்நெறியும், அறிவியல் நெறிப்போக்கும் மக்களிடையில் வளர்வதற்கு எமது பேராசானின் நூல்கள் பெருந்துணை புரியும்.

சைவப் பெரியார் ஆழ்ந்த கடவுட் பற்றுடையவராயினும், கடவுளின் பெயரால் நிலவிவரும் மூடப் பழக்க வழக்கங்களைப் பெரிதும் கடிந்து ஒதுக்கும் இயல்பினர். ஆங்கில மேதை பகுத்தறிவாளர் தலைவன் ... றசெல் பெரியாரின் பெருமதிப்புக்குரியவர்.

சைவப் பெரியார் பெரும் கல்விக் கடல். அவர் அறிவுக் கடலில் குளித்து முத்துக்களாகிய அரிய கருத்துகளை எடுத்துக் கூறும் ஆராய்ச்சி ஆற்றல் வாய்ந்தவர்.

'மானுடம் இவர் தாம்

ந. சபாரத்தினம்
(முன்னைநாள் அதிபர்,
யாழ். இந்துக் கல்லூரி)

அல்லர், நற்பெருந் தெய்வம்' என்று போற்றத்தக்க நிலையில் வாழ்ந்த மாட்சியை உடையவர் சைவப் பெரியார். அவர் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றையும் நோக்குந்தோறும் அவரைப்போல இனி யார் உளரோ என்ற நினைவு எழுகின்றது.

சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரின் பெருமையைப் போற்றுவோம். அவர் தம் நெறி நின்று ஒழுகி உய்வோம்.

(நன்றி; நூற்றாண்டு விழாமலர் - 1978)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### கொடி ஏறுது வினை தீருது!

எடுப்பு

கொடி ஏறுது நல்லூர் கொடி ஏறுது
அடி யாரது பொலலா வினை தீருது
(கொடி)

தொடுப்பு

வடி வேலொடு கந்தன் வெளி யேறுறன்
படி மீதிலே கண்கள் களி கூருது
(கொடி)

முடிப்பு

வடி வானவன் மூலப் பொருளானவன்
வர மானவன் நல்ல வள மானவன்
முடி வானவன் ஞான முத லானவன்
முழு தானவன் போற்றித் துதி பாடுவோம்!
(கொடி)

நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை,

# முருகனிடம் எம்மை அழைக்கும் நல்லூர் மணியோசை கேட்கிறது!

எல்லோருக்கும் இன்னருள் புரியும் அழகன் முருகனின் ஆலயத்தின் அமைப்பும் அழகும் நல்லூரின் நலத்தை நான்குதிக்கும் பரப்பி நிற்கும். நாவலமையால், நானிலத்தில் 'நாவலர்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஆறுமுகநாவலரும் நல்லூர் பயந்த நன் மகனேயாவர். அருட்பசியை ஆற்றிவந்த ஆளுடைய பிள்ளையாரின் அருள்நாயத்தைத் தாங்கி நிற்கும் ஞானசம்பந்தர் ஆதீனமும் நல்லூரின் நலத்தை நன்கு பறைசாற்றும். நல்லூர்த் தேரடியின் சிறப்பும் நல்லூரின் தெய்வீகத்தைத் திசையெங்கும் பரப்பும். இத்துணைச் சிறப்புக்கள் வாய்ந்த நல்லூர் உண்மையில் நல்ல ஓர் ஊர்தான்.

நல்லூரின் எல்லையை நண்ணுவார்க்கு உள்ளத்தில் ஒரு தெய்வீக உணர்வு எழுவது இயற்கை. ஆலயத்தின அழகும் பொலிவும் சுற்றுடலின் தூய்மையும் புனிதமும் ஆலயபூசை ஒழுங்கும், அர்ச்சகர்களின் அருள்விளங்கு தோற்றமும் அடியார்களின் பரவச நிலையும் எவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும். நித்திய பூசை பெருவிழா போல விமரிசையாக நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்பு.

ஆடி அமாவாசையிலிருந்து ஆறும்நாள் கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி இருபத்தைந்து தினங்கள் பகலும் இரவும் உற்சவங்கள் நடைபெறுகின்றன. இருபத்தாறும் நாள் பூங்காவனத் திருவிழாவும் அடுத்தநாள் வைரவப் பெருமானுக்கு விசேஷ பூசையும் சாந்தியும் நடைபெறும். மஞ்சத் திருவிழா, திருகார்த்திகைத் திருவிழா, கைலாச வாகனத் திருவிழா, மாம்பழத் திருவிழா, திருக்கலியாண உற்சவம்என்பன சிறப்பான திருவிழாக்கள். இவற்றை விஞ்சும் தேர், தீர்த்தத் திருவிழாக்களே.

வெள்ளி வாகனங்கள், வர்ண வாகனங்கள் என்பவற்றில முருகன், தேவியர் சமேதராய் வீதி உலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

பழமைவாய்ந்த இவ்வாலயத்தை நல்லூரை ஆட்சி செய்த ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்ற பட்டப் பெயர் பூண்ட செண்பகப் பெருமாள் என்ற அரசன் கட்டினன். (1450 - 1460) இத்தகவலை கோயிலில் திருவிழாக் காலத்தில் கூறப்படும் கட்டியத்திலிருந்தும், பிற சான்றுதழ்களிலிருந்தும் அறிந்து கொள்ளுகின்றோம். இன்று ஆலயம் புதுப்பொலிவு பெற்று எழிலுடன் விளங்குகின்றது.

கோயிற்பூசை நடைபெறும் வேளை, ஆறுமணிகள் கோபுரங்களில் இருந்து ஒலி எழுப்புகின்றன. அவ்வோசை அயல் பகுதி எங்கும் பரவுகின்றது. மக்கள் 'ஓம் முருகா' என்று உள்ளன்புடன் கந்தனை நினைந்து வந்தனை செய்கின்றனர்.

நல்லூர் மூலஸ்தானத்தில் வேல் ஒளியுமிழ்கின்றது. அந்த வேலே எமது வினை தீர்க்கும். அந்த வேலை வணங்குதலையே வேலையாகக் கொள்வோம். ★

-பரமேஸ்வரி சிவராமலிங்கம்-

### மகோற்சவம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை 7 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 5

பண்டைதீவு-வேப்பந்திடல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பிகை தேவஸ்தான மகோற்சவம் நாளை 7 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

15 ஆம் திகதி தேர் உற்சவமும் 16 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் சோதனை நிலையங்கள் நாட்டின் பல பகுதிகளிலும்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 6
நாட்டின் பல பகுதிகளிலும் ''எயிஸ்ட்'' பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்நிலையங்கள் அமைப்பதற்கு உதவுமாறு அரசாங்கம் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் கோரவுள்ளது.

நாட்டில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கவனத்தில் கொண்டே பரிசோதனை நிலையங்களைத் திறக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

''எயிட்ஸ்'' நோய் பரிசோதனை நிலையங்கள் தற்போது கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமே இயங்கிவருகின்றன.


## வெளிநாட்டுப் பயணம்

★ ஜேர்மனி ★ இத்தாலி
★ நோர்வே

பயணம் செய்ய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

★ குவைத்
கிளீனேர்ஸ், காப்பென்ரேஸ், ஹவுஸ் டிரைவர், H. V டிரைவர், கார் மெக்கானிக், கார் ரிங்கர், கார் பெயின்ரர்.

★ சவூதி அரேபியா
கிளீனேர்ஸ், ஹவுஸ் டிரைவர், காப்பென்ரேஸ்

★ ஓமான்
ரெயிலேஸ்

★ குவைத் - சிங்கப்பூர்
பணிப் பெண்கள்

விருப்பமுடையோர் பாஸ்போட் 6 படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. க. இந்திரலிங்கம் (சந்திரன்)

# நிரோஷன் என்ரபிறைஸ்

பருத்தித்துறை வீதி, மயிலிட்டி,
காங்கேசன்துறை.
(T. B. வைத்தியசாலை அருகில்)

[1417]



# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
பிரிவு - 4

**O/L** Day Classes (8.30—1.30)
EveningClasses (3.00—5.00)

புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 7-8-1989

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு: ★

| | |
|---|---|
| விஞ்ஞானம்:- | திரு. சூரி |
| கணிதம்:- | திரு. செல்வா |
| தமிழ்:- சமயம்:- | திரு. சுந்தரலிங்கம் |
| ஆங்கிலம்:- | திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி:- | திரு. கருணாகரன் |
| வர்த்தகம்:- | திரு. சுந்தரமூர்த்தி |

முக்கிய குறிப்பு:
I கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும் ஒரே நிறுவனம்.
II மாணவர்கள் முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(சி-2943)



# பிரயாண ஏற்பாடுகள்

● ஜேர்மனி
(16 வயதிற்கு மேற்பட்டோரும் கீழ்ப்பட்டோரும்)

பிரயாண ஏற்பாடுகள் விரைவாக செய்து கொடுக்கப்படும்.
சவூதி அரேபியா, ஓமான், குவைத், அபுதாபி, பாஹ்ரின்
ஆகிய நாடுகளுக்கு ஆண், பெண் இருபாலருக்கும் உரிய தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தித்தரப்படும்.

● சிங்கப்பூர்
சிங்கப்பூரில் தமிழ்க்குடும்பங்களில் வேலை செய்ய பணிப்பெண்கள் தேவை:
தொடர்பு கொள்க அல்லது நேரில் வரவும்.

★ சங்கர் ரவல் சேர்விஸ் ★

இல. 63 (125), சிவன்கோயில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பில் தொடர்பு கொள்ள முகவரி:
**Garuda Enterprises**
S 47-3rd Floor,
Colombo Central Supper Market,
COLOMBO - 11.
Tel No: 548922.

(சி-3152)


# கொங்கிறீட் தபாற் பெட்டிகள்;

## பழுதடைந்த பெட்டிகளும் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 4
வட பகுதி தபால் நிலையங்களுக்கு 'கொங்கிறீட் தபால் பெட்டிகளை அனுப்பி வைப்பதற்கு தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பழுதடைந்த நிலையில் இரும்புத் தபால் பெட்டிகளை திருத்துவதற்குத் தேவையான பூட்டு மற்றும் வேறு பாகங்களையும் அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

''கொங்கிறீட்'' தபால் பெட்டிகள் கூடிய விரைவில் யாழ்ப்பாணம் வந்து சேரும் எனவும் யாழ் - தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை யாழ்ப்பாணத்தில் தற்பொழுது பல இடங்களில் உள்ள தபால் பெட்டிகளும் திறந்த நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (த-10)

# பல்கலைக்கழகங்களை திறப்பது நாட்டு நிலைமையைப் பொறுத்தே

## உயர் கல்வி அமைச்சர் பெரேரா

நாட்டின் நிலைமை பற்றி பாதுகாப்புப் படையினர் வழங்கும் சிபார்சைப் பொறுத்தே பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறப்பது எப்போது என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

உயர்கல்விப் பதில் அமைச்சர் திரு. போல்பெரேரா இத்தகவலை கொழும்பில் வெளியிட்டார்.

பாதுகாப்புப்படையினரால் அண்மைக் காலத்தில் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை வெளியிட பதில் அமைச்சர் மறுத்துவிட்டார். (எ)

# பொலீஸ் குடும்பங்களுக்கு உணவு முத்திரைகள்

யாழ்ப்பாணம், ஆக.6
கடந்த வருடம் வரை விண்ணப்பம் சமர்ப்பித்த பொலீஸ்காரர்களின் பராமரிப்பில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு விரைவில் தகுதி அடிப்படையில் உணவு முத்திரைகள் கிடைக்க உள்ளன.

பொலீஸ்காரர்களின் பராமரிப்பில் தங்கி வாழ்பவர்களுக்கு உணவு முத்திரை வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்திலும் உணவு முத்திரைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலீஸ் உத்தியோகத்தர்களில் தங்கியுள்ளவர்கள் 1988 ஆம் ஆண்டுக்கு முன்னர் உணவு முத்திரை பெறுவதற்காக விண்ணப்பித்திருந்தால் அவர்களில் உணவு முத்திரை பெறத் தகுதியுள்ளவர்களுக்கு உணவு முத்திரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமூகசேவைப் பகுதியினர் தெரிவித்தனர்.

பொலீஸ் உத்தியோகத்தருக்கு உணவு முத்திரை வழங்கப்படமாட்டாது என்றும், அவர்களில் தங்கி உள்ளவர்கள் தகுதியானவர்களாயின் அவர்களுக்கு மட்டுமே உணவு முத்திரை வழங்கப்படும் என்றும் சமூகசேவைப் பகுதியினர் தெரிவித்தனர். (த-3)

# தனியார் கல்விநிறுவன ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஆக. 6
தனியார் கல்விநிறுவன ஒன்றிய நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன், உபதலைவர் திரு. இரா. செலவ வடிவேல், இணைச்செயலாளர்கள் திரு. க. ஆனந்தகுமார், (பொன்ட்), திரு. எம். ஜெயந்தன், பொருளாளர் திரு. ரி. யோலநாதன், கணக்காய்வாளர் திரு. ரத்தினம்.

யாழ்ப்பாணம் கோட்டக் கல்விப் பிரிவில் இருந்து திருவாளர்கள்: ஸ்ரீதரன், சிவமோகன், கலாதரன், வேலணை கோட்டக்கல்விப் பிரிவில் இருந்து திரு. கதிர்காமநாதன், பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி பிரிவில் இருந்து திருவாளர்கள்: நவரட்ணராஜா, சூரி, கியோரும்—

சுன்னாகம் கோட்டக்கல்விப் பிரிவில் இருந்து திருவாளர்கள் சபாநாதன், தேவதாஸ் முத்துலிங்கம், பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலகத்தில் இருந்து திரு. சங்கரலிங்கம் ஆகியோரும் செயற்குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள்: கமலக்குமார், குமாரவேல், குழந்தைவேல், ஐங்கரநேசன், மரிக்தாஸ் ஆகியோரைக் கொண்ட ஆலோசகர் குழுவும் அமைக்கப்பட்டது. (த-10)

# ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஆக.6
ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் பரீட்சை ஆரம்பமாக இருந்தது.

ஒத்திவைப்புப்பற்றி நேற்று அறிவிக்கப்பட்டது.

பரீட்சையைப் பின்போடும்படி பல்வேறு கல்விநிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் தெரிவித்த யோசனைகளை ஆராய்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சையை எப்போது நடத்துவது என்பது பற்றி கல்வி அமைச்சர் விரைவில் தீர்மானிப்பார்.

பரீட்சை நடைபெறும் திகதிகுறித்து சகல பரீட்சாத்திகளுக்கும் அறிவிக்கப்படுமென பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர்வெதமுல்ல தெரிவித்தார்.

இதேவேளை ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையும் பின்போடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையும் எப்போது நடைபெறும் என்பது பற்றி பின்னர் அறிவிக்கப்படுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (த)

# தட்டுப்பாடு இல்லை

கொழும்பு. ஆக. 6
காஸுக்குத் தட்டுப்பாடு இல்லை என்று கொழும்பு காஸ் மற்றும் வாட்டர் கம்பெனியின் தகுதி வாய்ந்த அதிகாரி திரு. கே. ராஜப்பன் தெரிவித்தார். (உ-எ)

# ஸ்தம்பிதநிலையில் ஆஸ்பத்திரி

வல்வெட்டித்துறை, ஆகஸ்ட் 6
மந்திகையில் உள்ள அரசினர் வைத்தியசாலை ஸ்தம்பிதம் அடையும்நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

பிரெஞ்சு வைத்தியக் குழுவினரைத் தவிர்த்து ஒரே ஒரு உள்ளூர் டாக்டர் (செல்வி சுசிலா செல்லத்துரை) மட்டுமே இப்போது அங்கு பணி புரிகிறார்.

ஏனைய டாக்டர்களும், தாதிகள் உட்பட்ட மற்றும் ஊழியர்களும் இப்போது நிலவும் பதற்ற நிலையால், பாதுகாப்புக் கருதி கடமைக்குத் திரும்பவில்லை. பலர் லீவு போட்டும், வேறு பலர் லீவு போடாமலும் கடமைக்குச் செல்லாதிருக்கிறார்கள்.

இதேவேளை ஆஸ்பத்திரியின் முன்பக்க வாசலைப் பாவிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெள்ளியன்று கடமைக்குச் சென்ற ஊழியர்கள் தடுத்து வைக்கப்பட்டு சிலமணி நேரம் கழித்தே ஆஸ்பத்திரி செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற நோயாளர் பலரும் தாமாகவே வெளியேறிவிட்டனர். (அ-169)


# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்:
15-04-1931



மறைவு:
07-07-1989

## திரு. கந்தையா இரத்தினசிங்கம்

மாசிலா மணியாய் வசையிலா நிறையாய்
காசிலாக் குணனாய் கறையிலா நிலவாய்
தேசெலாம் போற்று சீர்த்திப் பெருமையாய்ப்
பேசிட வாழ்ந்த பெருமையன் ஆனாய்!

அன்பினை அள்ளி அமுதென அருந்தவம்
என்பினை உருக்கும் இன்மொழி பேசியும்
துன்பமே இன்றிச் சுகமாய் வாழவும்
மன்பதை வாழ வாழ்ந்து காட்டினை!

பப்பா என்றே பதறித் துடித்திட
செப்படி வித்தை காட்டி மறைந்தாய்
எப்படி நின்னை மறந்திட முடியும்?
இப்புவி எம்துயர் தீர்ந்திடும் பப்பா!

மனைவி, மக்கள்.

3, வைமன்வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2942)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி சிவகுரு அன்னம்மா

தோற்றம்: 11 - 09 - 1903
மறைவு: 07 - 07 - 1989

எம்மை விட்டுப் பிரிந்த அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

75/2, சண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[11758]



உ
ஓம் சரணம் ஐயப்பா!

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## உயர் திரு. வ. பொ. சிவராசா (V.P.S.)

அன்னை மடியில்: 17 — 01 — 1928
இறைவன் அடியில்: 19 — 07 — 1988

திதி: 06 — 08 — 1989

அப்பா என அழைக்க எமக்கிங்கு யாருமில்லை
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை நம் கவலை
பண்புடன் வளர்த்தீரே! பாசமுடன் வளர்த்தீரே!
நித்தமும் எங்கள் சுகம் அறிவீர்கள்

ஆனால்—

இன்று உங்கள் சுகம் கூற நாம் மறந்ததென்ன?
உங்கள் செயல், பண்பு, சிங்காரத் தோற்றமும்
கலகலப்பான பேச்சும் எங்களை நித்தமும்
உங்களை நினைக்கச் செய்கின்றனவே!

நாங்கள் உங்களைக் காண்பது எப்போது?
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை நித்தமும் வேண்டுகின்றோம்.

06-08-89 இன்று அப்பாவின் ஓராண்டு நினைவு தினத்தில் திருநெல்வேலி இல்லத்தில நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

''ராஜேஸ்வரி வாசா''
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

[11762]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேஷ்முக் பதவி நீடிப்பு

புதுடில்லி ஆகஸ்ட் 5 பிரதமர் ராஜீவ் காந்தியின் பிரதம செயலாளராக திரு. பி. ஜி. தேஷ்முக் மேலும் ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப் பட்டிருக்கிறார்.

சென்ற முதலாம் திகதி தொடக்கம் புதிய நியமனம் அமுலுக்கு வந்திருக்கிறது.

கடந்த மாதம் திரு. தேஷ்முக் பிரதமர் ராஜீவின் விசேட செய்தியை ஜனாதிபதி திரு. பிரேமதாசாவுக்கு எடுத்து வந்தார் என்பது தெரிந்ததே.


### மகாபொல கொடுப்பனவு
### 2ஆம், 3ஆம் தவணைப்பணம் - 1989

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் கீழ் வருமாறு செய்யப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| **2ஆம் வருடம்** | | |
| கலைப்பிரிவு | 15-08-89 காலை | 9.30—12.00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 21-08-89 பி பகல் | 1.30— 3 00 |
| வர்த்தகப்பிரிவு | 31-08-89 பி: பகல் | 1 30— 3.00 |
| **3ஆம் வருடம்** | | |
| கலைப்பிரிவு | 15-08-89 பி.பகல் | 1.30— 3 00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 22-08 89 காலை | 9 30—12 00 |
| வர்த்தகப்பிரிவு | 01-09-89 காலை | 9 30—12 00 |
| **4ஆம் வருடம்** | | |
| கலைப்பிரிவு | 17-08 89 காலை | 9.30—12 00 |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 22-08-89 பி.பகல் | 1 30— 3.00 |
| வர்த்தகப்பிரிவு | 01-09-8 பி.பகல் | 1 30— 3.00 |
| **விஞ்ஞான பீடம்** | | |
| 2ஆம் வருடம் பௌதிகம் உயிரியல் | 08-08-89 காலை | 9.30—12.00 |
| 3ஆம் வருடம் '' | 09-08-89 பி.பகல் | 1 30—03 00 |
| 4ஆம் வருடம் '' | 29 08-89 காலை | 9 30—12 00 |

1989ஆம் ஆண்டின் நிலுவைப் பணத்தையும், 1989ஆம் ஆண்டு 1ஆம் தவணை (யூன் 89) பணத்தையும் எடுக்கத்தவறிய மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் பின்வருமாறு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**2ஆம். 3ஆம், 4ஆம். 5ஆம் ஆண்டு மாணவர்கள்**

கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, வியாபார நிர்வாகப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு, மருத்துவப்பிரிவு

| | | |
|---|---|---|
| 07-08-89 | முற்பகல் | 9.30—12.00 |
| 08-08-89 | பிற்பகல் | 1,30— 3.00 |
| 28 08-89 | முற்பகல் | 9 30—12.00 |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:
1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. 2/-ரூபாபெறுமதியான முத்திரை
3. மாணவர் பதிவுப் புத்தகம்

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி. [சி-3172]


# பத்தாண்டு மோதலுக்குநல்ல முடிவு; கம்போடியத் தலைவர்கள் உறுதி

பாரிஸ், ஆக. 5 கம்போடியா பற்றிப் பாரிசில் நடைபெறும்பேச்சுவார்த்தைகளில் கடந்த பத்து ஆண்டு காலமாக அந்த நாட்டில் நடைபெறும் மோதலுக்கு ஒரு நல்ல முடிவுகாண வேண்டும் என்று தாம் உறுதியுடன் இருப்பதாக கம்போடியப் போராட்டத் தலைவர்கள் தெரிவித்தார்கள்.

''இந்த 'குருரக்குகை'யிலிருந்து கம்போடியாவை விடுவிக்கத் தாம் உடன்படிக்கை ஒன்றைக் காணப் பாடுபடுவார் என்று இளவரசர் நொரொடொம் சிஹானுக் கம்போடியப் பிரதமர் ஹூன் சென்னைச் சந்தித்த போது கூறியதாக அறிவித்தார்.

முன்னாள் கம்போடியப் பிரதமரும் கெமெர் மக்கள் தேசிய விடுதலை முன்னணியின் தலைவருமான சொன்சான் ''பாரிஸ் பேச்சு வார்த்தைகளின் பயனாக ஒரு தீர்வு நெருங்கி வருகின்றது'' என்று கூறினார்.

பாரிஸ் மாநாடு பூரண வெற்றி பெறுமுகமாகத் தாம் ஹூன் சென்னுடன் சமரசத்துக்கான ஒரு பாதையைத் தேடி விவாதித்ததாக இளவரசர்சிஹானுக்கூறினார், இளவரசர் கம்போடியாவில் வியட்னாமின் பிரசன்னத்தை எதிர்த்துப் போராடும் மூன்று கோஷ்டிக் கூட்டின் தலைவராவார் 'கெமெர் ரூஜ்' இந்தக் கூட்டிலுள்ள மூன்றாவது கோஷ்டியாகும்.

இந்த எதிர்ப் போராட்டக் கோஷ்டியை ஐ. நா அங்கீகரித்துள்ளது அறிந்ததே.

பாரிஸ் மாநாடு அனுப்பும் ஐ.நா தூதுக் கோஷ்டியை வரவேற்கும்படி தமது அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளதாக ஹூன்சென் கூறினார்:

மாநாட்டின் ஆரம்பத்தில் அவர் சமாதானத் திட்டத்தின் அமுலைப் பற்றி அறிந்து கொள்வதில் ஐ. நா ஒரு பாத்திரம் வகிப்பதை எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது: (க)

## பாடகரிடம் விவாகரத்துக் கோரும் பதினைந்து மனைவியர்கள்

கமறூன் நாட்டில் ஒரு பொப் பாடகர். அவருக்கு 45 மனைவிமார். இவர்களில் 15 மனைவிமார்கள் அவரிடம் விவாகரத்துக் கோரியுள்ளனர். காரணம் 15 பேருக்கும் ஒரு கார் வேண்டுமாம்.

ஒபாமா எஸ்ஸோமெ ஜூலியட்டி வியூ என்ற இந்தப் பாடகர் தான் காரை வாங்கிக் கொடுக்க மாட்டார் என்று நீதிமன்றத்தில் கூறியுள்ளார். ஏனென்றால் 15 மனைவிமாரும் அதில் செல்ல முடியாது: பதிலுக்கு ஒரு மினிபஸ்ஸை வாங்க அவர் திட்டமிட்டிருக்கிறாராம். (க)

# தங்கக்கட்டிகள் எடுக்கப் போய் பனிக்கட்டியில் சிக்கி 21பேர் பலி!

### சீனாவில் சம்பவம்

பீகிங், ஆக 5 சீனாவில் திபெத் அருகே சிங்காய் மலைப்பகுதி உள்ளது. கடல் மட்டத்துக்கு மேல் 17 ஆயிரம் அடி உயரத்தில் இந்த மலைச்சிகரம் உண்டு.

இங்கு தங்கக் கட்டிகள் குவிந்து கிடப்பதாகக் கூறப்பட்டது.

இதைத்தொடர்ந்து ஏராளமானவர்கள் தங்கம் எடுக்கச் சென்றனர்.

ஆனால் அங்கு பருவநிலை திடீரென்று மாறியதால் பனிக்கட்டிகளிடையே தங்கம் எடுக்கச் சென்றவர்கள் சிக்கிக் கொண்டனர்,

அப்போது 21 பேர் பலியானார்கள். சிக்கி உயிர் பிழைத்த சுமார் 8 ஆயிரம் பேரை பனிக்கட்டிகளிடையே இருந்து மீட்பதில் சீன அரசு ஈடுபட்டுள்ளது. (எ)

## மறைந்தனர்

சீன ஒப்பராக் குழு ஒன்றைச் சேர்ந்த 8 பாடகர்கள் சான் பிரான்சிஸ்கோவில் குழுவை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள்.

''குன் ஒப்பரா''க் குழு ஒன்றின் 28 பேரைக் கொண்ட கோஷ்டியில் இவர்கள் அமெரிக்கப் பயணம் மெற்கொண்டிருந்தார்கள்;

# அரபுப் பிரதேசத்தில் தேர்தல்; பலஸ்தீனியர் நிராகரிப்பு

ஜெரூசலம், ஆக. 5 கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் தேர்தல் நடத்தும் திட்டத்தை நிராகரிப்பதாக பலஸ்தீன விடுதலை இயக்கம் அமெரிக்காவுக்கு அறிவித்துவிட்டது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் ஜோன் கெல்லியைச் சந்தித்து பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

அரபுப் பிரதேசத்தில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் முதலில் வெளியேற வேண்டும் என்று பலஸ்தீனியர் வற்புறுத்தி வருகின்றனர்.

## பாலியல் சந்தை

ஜெனிவா, ஆக 5 உலகில் ஒவ்வொரு ஆண்டும் பத்துஇலட்சம் குழந்தைகள் பாலியல் சந்தைக்குள் தள்ளிவிடப்படுகின்றனர் என்று நோர்வே அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகின்றது.

பிரான்சின் தலைநகரமான பாரிசில் மாத்திரம் 18 வயதுக்குக் குறைந்த 5,000 இளைஞர்களும் 3,000 யுவதிகளும் விபசாரத் தொழில் புரிவதாக இந்த அறிக்கை கூறுகின்றது.

# நீதிபதிகள் ஆர்ப்பாட்டம் கொலம்பியாவில் நடந்தது!

கொலம்பியா, ஆக. 5 கொலம்பியாவில் 22 ஆயிரத்துக்கு அதிகமான முனிசிப்பல் நீதிபதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போதைவஸ்துக் கடத்தல் காரர்களிடமிருந்து பாதுகாப்பளிக்க அரசு தவறிவிட்டது. என்று கூறி இவர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

கடந்த திங்கட்கிழமை 3 குழந்தைகளுக்குத் தாயான திருமதி மாரியாடயா என்ற பெண் நீதிபதியை போதைவஸ்துக் கடத்தல்கார கும்பல் ஒன்று சுட்டுக் கொன்றது.

1980 இல் இருந்து இதுவரை கொலம்பியாவில் 45 நீதிபதிகள் கடத்தல்காரர்களால் கொலை செய்யப்பட்டனர். (எ)

## சோமாலியாவில் 400 பேர் பலி!

பாரிஸ், ஆக. 5 சோமாலியா நாட்டில் இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த கிளர்ச்சியாளருடன் மோதல் ஒன்றில் அரசுப் படைகள் 400 பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர் என்று இரண்டு பத்திரிகையாளர்கள் பாரிஸில் தெரிவித்தனர் (எ)

# புதிய இந்திய அரசியல் சரித்திரம் எழுத தி. மு. க. உதவும் என கருணாநிதி அறிவிப்பு

கூடலூர், ஆக 5 இன்னும் சில மாதங்களில் இந்தியாவின் அரசியல் சரித்திரத்தை திருப்பி எழுதுவதில் தி. மு. க. பிரதான பங்கு வகிக்கப் போகிறது.

பண்ருட்டியில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் முதலமைச்சர் திரு. கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஞாயிறு நடந்த இக்கூட்டத்தில் திரு. கருணாநிதி மேலும் சொன்னதாவது;

அடுத்த மாதம் தொடக்கம் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்து இரண்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

தமிழ் நாட்டில் 25 ஆயிரம் கிராமங்கள் உள்ளன. ஆகவே 50 ஆயிரம் இளைஞர்கள் புதிதாக வேலை வாய்ப்பைப் பெறுவர்.

மத்திய அரசு சர்வாதிகார சட்டங்களைக் கொண்டு வருகிறது.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார். (எ)

## ஜப்பான் குண்டர் கும்பலின் சம்பாத்தியம்

டொக்கியோ, ஆக 5 ஜப்பானின் குண்டர் கும்பல்கள் 1988 ஆம் ஆண்டில் 960 கோடி டாலர் பணத்தை சம்பாதித்தன என்று ஜப்பானிய தேசிய பொலீஸ் நிறுவனம் அறிவித்துள்ளது

ஊக்கமளிக்கும் போதைப் பொருள்களை விற்பதன் மூலமும் சூதாட்டத்தின் மூலமும் அவை இப்பணத்தைச் சம்பாதித்தன.

இந்தக் குண்டர் கும்பல்களில் கால்வாசி மேற்கு ஜப்பானிலுள்ள யமக்குச்சி- குமி என்ற கும்பலைச் சேர்ந்தது எனவும் பொலீஸ் அறிக்கை கூறியது: (க)

### கியூபாவில்

# சோவியத் சஞ்சிகைகளுக்கு தடை

கியூபா இரண்டு சோவியத் சஞ்சிகைகளுக்குத் தடை விதித்து கம்யூனிஸ்ட் உலகில் ஏற்பட்டுவரும் சீர்திருத்த நடவடிக்கைகளுக்குத் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

மேற்கு நாடுகளின் ஜனநாயக முதலாளித்துவக் கொள்கைகளுக்கு இந்த வெளியீடுகள் சாதகமாக இருந்தன.

மொஸ்கோவிலிருந்து வெளியாகும் வாராந்த செய்திச் சஞ்சிகைக்கும் ஸ்புட்னிக்என்ற மாதாந்த சஞ்சிகைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கியூபா ஜனாதிபதி பிடெல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார்;

கியூபா தொடர்ந்து அதன் சோஷலிசக் கொள்கையைப் பின்பற்று என்றும் அவர் தெரிவித்தார்; (க)

# செய்தியாளரை தாக்கியதாக 'ஜெ' உதவியாளர்மீதுவழக்கு

அ தி. மு. க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் உதவியாளர் திரு. எம். நடராஜன் மீது தேனாம்பேட்டை பொலீஸார் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றனர்;

'நமது எம். ஜி. ஆர்' என்ற நாளிதழின் முன்னாள் செய்தியாளர் வி. கண்ணன் என்பவரைத் தாக்கியதாக நடராஜன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

கண்ணன் தனது முறைப்பாட்டில் கூறியிருந்ததாவது;

ஆகஸ்ட் 2 ஆம் திகதி முதல் 'நமது எம்.ஜி.ஆர்' நாளிதழ் மீண்டும் வெளிவரும் என்ற விளம்பரத்தைப் பார்த்தேன்.

அதன் பின்னர் திரு. நடராஜனைச்சந்திக்கச்சென்றேன். அவர் என்னை அறைக்குள் இழுத்து. 'ஏனைய பத்திரிகைகளுக்கு தகவல்களை இரகசியமாகக் கொடுப்பதாக'க் கூறித் தாக்கினார் —'இப்படி அவர் முறைப்பாட்டில் கூறி இருந்தார்.

முறைப்பாட்டை பரிசீலனை செய்த சென்னைப் பிரதமநீதிவான், அதனை மேல்நடவடிக்கைக்காக தேனாம் பேட்டை பொலீஸுக்கு அனுப்பினார்.

அதைத்தொடர்ந்தே நடராஜன் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டது: (எ)

# தி. மு. க. நாளிதழ் மீது "குமுதம்" ஆசிரியர் வழக்கு!

தமிழகத்தில் வெளியாகும் தி. மு. க. ஆதரவு நாளிதழான "முரசொலி" மீது குமுதம் அவதூறு வழக்குத் தொடரப் போவதாக அறிவித்திருக்கிறது.

'ஓம்னிபஸ்' உரிமையாளரிடம் இருந்து குமுதம் ஆசிரியர் [illegible] மீது எவ்வளவு லஞ்சம் பெற்றார் [illegible]

இத்தலைப்பில் 11-6-89 முரசொலி இதழில் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டது.

இந்த அவதூறு கட்டுரையைப் பிரசுரித்ததற்காக 10 லட்சம் ரூபா நஷ்டம் வழங்கும்படி கோரி குமுதம் ஆசிரியர் சார்பாக வழக்கறிஞர் [illegible] நாராயணன் முரசொலிக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார் (உ-எ)


## துரித வகுப்புக்கள்

எமது பழைய மாணவர்களிடம் கடந்தகால பரீட்சைப பெறுபேறுகளைத் தீரவிசாரித்துச் சேர்ந்துகொள்ளுங்கள். அகில உலக பரிசில்களைக்கூடப் பெற்றிருக்கிறார்கள்.

இன்று குதூகல ஆரம்பம்:

**C. I. M. A.**

(Stage I - Nov, 89)

- கொழும்பில 15 வருடகாலமாகப் புகழ்பெற்று, தொடர்ந்து யாழ் நகரில் 6 வருடங்களாக சேவை நோக்குடன், பல சாதனைகளைப் புரிந்து வரும் விரிவுரையாளர் குழு:

திருவாளர்கள்:
V. கருணாநிதி S. P. சிவஞானம் S. சிவபாலன்
பிலிப் சிறிநந்தகுமார்

- To Sit Your Exams; With absolute confidence Enrol with

**RAPID RESULTS INSTITUTE**

212, கச்சேரிநல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## PERSONAL CLASSES

B. M. C, Front Lane,
JAFFNA.

**A/L 89, 90 & 91**

**Week End Classes**

ஆரம்பமாகிவிட்டன.

| | 89 | 90 | 91 |
|---|---|---|---|
| PHY | 8. 30 | 9. 30 | 10. 30 |
| CHE | 9 30 | 8. 30 | 11. 30 |
| ZOO | 10. 30 | 11. 30 | 8. 30 |
| BOT | 11. 30 | 10. 30 | 9: 30 |
| PURE & APP | 1. 30 | 1: 30 | 12; 30 |

**A/L 91 புதிய பிரிவு ஆரம்பம்**
06 - 08 - 1989 ஞாயிறு 8-30 a.m

✶ A/L 89 DAY CLASSES ஆரம்பம்
7 - 8 - 89 திங்கட்கிழமை 8. 30 a.m.

(C/3183)

## சுஜேரா ரவல்ஸ்

மேற்கு ஜேர்மனி (Germany)க்குப் பிரயாணம் செய்ய விரும்புவோர் (16 வயதிற்கு உட்பட்டவர்களும் மேற்பட்டவர்களும்) எங்கள் காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பெரியோர்களில் எமது அடுத்த பயண ஒழுங்குக்கு மேலும் 6 பேர்களுக்கு மட்டுமே 15 நாட்களுக்குள் அனுப்பிவைக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். 16 வயதுத் தோற்றத்தில் சிறியோராக இருப்பவர்கள் ஒவ்வொரு இழையையும் அனுப்பி வைக்கப்படுவர்.

★ **சுஜேரா ரவல்ஸ்** ★

21, வேம்படி றேட்,
யாழ்ப்பாணம்.

(சி/3179)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் பரிசோதித்து
கண்ணாடி வழங்குபவர்



P. I. பர்ணண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் எதிரில்)
யாழ்ப்பாணம்.



# உதயன்

06-08-1989 ஞாயிற்றுக்கிழமை



பல் கட்டுவதில்
கை தேர்ந்தவர்கள்



கிளை:
P. I. பர்ணண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(அரசினர் வைத்தியசாலை எதிரில்)
யாழ்ப்பாணம்.


## இந்தியாவின் யோசனைகள் குறித்து தீர்மானிப்பவர் ஜனாதிபதியே!

### பேச்சு முடிந்து திரும்பும் வழியில் ரஞ்சன் பேட்டி

சென்னை, ஆக 6

புதுடில்லியிலிருந்து கொழும்பு திரும்பும் வழியில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இலங்கைக் குழு தங்கிச் சென்றது.

தமிழ்நாடு சுகாதார அமைச்சர் டாக்டர் பொன்முடி இலங்கைக் குழுவை வரவேற்றார்.

அச்சமயம் அமைச்சர் விஜேரத்தினவை 'இந்து' செய்தியாளர் பேட்டி கண்டார்.

கேள்வி: புதுடில்லிப் பேச்சுக்கள் முடிவடைந்து விட்டனவா?

அமைச்சர்: இல்லை இல்லை. என்ன நடந்தது என்றால் ஆலோசனைகளின் பின்னர் இந்தியா சில யோசனைகளை எமக்குத் தந்துள்ளது.

அவற்றைஎடுத்துக்கொண்டு செல்கிறோம். ஜனாதிபதி பிரேமதாஸா அவற்றைப் பரிசீலனை செய்வார்.

இந்தியாவின் யோசனைகளின் பின்னால் உள்ள காரணங்களை நாம் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறுவோம்.

இரு தரப்பிலும் நிர்ப்பந்தங்கள் உள்ளன.

கேள்வி: அமைதிப்படையை பாசறைக்குள் முடக்கி வைத்திருக்க வேண்டும் என்று இலங்கை வற்புறுத்தியதா?

அமைச்சர்; 'முடங்கி' இருக்க வேண்டும என்று கூறுவது தண்டனை என்பது போல் உள்ளது. முகாமில் தங்கியிருக்க வேண்டும் என்று கூறுவது நல்லதல்லவா? அமைதிப்படை முடங்கியிருக்க முடியாது என்பதற்குபிரதமர் காந்தி விளக்கம் தந்தார். அமைதிப்படை ஒவ்வொரு இடமாக காலிசெய்து தாயகம்திரும்பும் வரை முகாம்களில் தங்கி இருக்கலாம் அல்லவா?

கேள்வி; வாராவாரம் 1,500 துருப்புக்களை இந்தியா வாபஸ் வாங்க வேண்டும் என்று இலங்கை கேட்டதா?

அமைச்சர்; இதற்கு மேல் என்னால் ஒன்றையும் கூறமுடியாது. அப்படிக் கூறுவது இரு அரசுகளுக்கும் நல்லதல்லவே!

கேள்வி; இந்தியாவின் யோசனைகள் என்ன?

அமைச்சர்; நமது ஜனாதிபதியிடமே முதலில் தெரிவிப்போம் அவரின் முடிவைப் பார்ப்போம். அவர்தான் தீர்மானிக்க வேண்டியவர்.

கேள்வி; அமைதிப்படை இராணுவநடவடிக்கைகளை நிறுத்துமா?

அமைச்சர்: இதற்குப் பதிலளிக்க முடியாது.

கேள்வி: விடுதலைப்புலிகளுடன் பேசக் கூடாது என்று இந்தியா உங்களை வலியுறுத்தியதா?

அமைச்சர்: அவர்கள் எப்படி அதைக்கூறமுடியும்? விடுதலைப்புலிகளும்எமது நாட்டவரேஇந்தியா அப்படிச்சொல்லவில்லை. நீங்கள் ஊகிக்கிறீர்கள்; என்னிடமிருந்து விஷயத்தை எடுக்க கேள்விகளை உருவாக்கிறீர்கள்.

கேள்வி: புதுடில்லிப் பேச்சுக்கள் இரு நாட்டு உறவை வளர்த்துள்ளதா?

அமைச்சர்; நல்ல அயலவர்களாக நாம் வாழ நம் உறவை பலப்படுத்த வேண்டும் என்று நம்புகின்றோம். (உ-எ)

## மீண்டும் வீதித்தடை

பச்சிலைப்பள்ளி ஆகஸ்ட் 6

மீசாலை புத்தூர் சந்தி முகாமுக்கு முன்னால் உள்ள கண்டி வீதிப் பகுதி மீண்டும் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வீதிமுன்னர்மூடப்பட்டு கடந்தசித்திரைவருடப்பிறப்பு தினத்தன்றே பாவனைக்கு திறந்து விடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-117)

## நாமக்கல் கவிஞர் நினைவு முத்திரை

சென்னை ஆகஸ்ட் 6

நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளையின் நினைவாக தபால் முத்திரை ஒன்று வருகின்ற அக்டோபர் 19 ஆம் திகதி இந்திய அரசு வெளியிட இருக்கிறது. (உ-எ-க)

## அமைச்சரவை.,-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக பிரதிநிதிகள் குழு உடனடியாகக் சதிர்காமத்திற்கு விரைந்தது.

பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்ற அமைச்சர்கள் ரஞ்சன் விஜேரத்ன, சாகுல் ஹமீத் ஆகியோர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விவரத்தை அங்கு வைத்து ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறினர். அவர்கள் ஜனாதிபதியுடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன. சாகுல் ஹமீத் ஆகியோர் பேச்சுக்கள் குறித்து அளித்த விளக்கங்கள் இலங்கை அமைச்சரவையின் நாளை திங்கட்கிழமை நடைபெறும் விசேட கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்றும்-

அதன் பின்னரே இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

## இந்திய உறவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

இலங்கையில் அமைதிப்படை தொடர்ந்து இருக்கப் போவதில்லை என்று நாம் தெரிவித்தோம். ஆனால் அறிகுறிகள் அதற்கு முரண்பாடானவையாக தெரிவதாக ஜனாதிபதி கூறினார்.

வெறும் கையுடன் இலங்கைக் குழு கொழும்பு திரும்பினால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று நாம் கேட்டோம்.

அதற்கு ஜனாதிபதி, "என்னிடம் மாற்று வழிகள் உள்ளன. அதை இப்போது தெரிவிக்கமாட்டேன்" — என்று சொன்னார்:

எப்படியாயினும் இராணுவ ரீதியான மோதல் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்படாது என்ற கருத்துப்பட ஜனாதிபதி கூறினார்.

"என்னால் இந்தியாவை எதிர்த்துபோராடமுடியாது" —என்றும் ஜனாதிபதி சொன்னார்.

அமைதிப்படை வெளியேறியவுடன் ஜே. வி. பியினரின் நடவடிக்கை நின்று விடும்.

அமைதிப்படை போனவுடன் ஜே வி.பியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவேன்.

அமைதிப்படை விவகாரத்தை நம்பித்தான் ஜே. வி. பியின் போராட்டம் உள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகும் முன்னர் ஜே. வி. பியில் இருந்து பலர் வெளியேறிக் கொண்டு இருந்தனர்.

ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் வெளியேறியவர்கள் எல்லாரும் மீண்டும் ஜே வி. பியில் சேர்ந்து கொண்டனர்.

ஜே. வி. பி. வளர அமைதிப்படையே உதவியது.

அமைதிப்படை போகாவிட்டால் ஜே வி.பியின் பலம் கூடும். எதிர்க்கட்சிகள் என்னைத் தாக்குவர்: நாட்டில் மேலும் கலவரம் ஏற்படும்.

— இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா மேலும் என்னிடம் சொன்னார் என்று பேராசிரியர் முனி கூறினார்: (உ-எ)

## பரீட்சை முடிவுகள் சிங்களத்தில்

யாழ்ப்பபணம் ஆகஸ்ட் 6

தாதிகள்பயிற்சிப் பாடசாலை இறுதியாண்டுப்பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்துள்ளன.

யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு உரிய பெறுபேறுகள் தனிச் சிங்களத்தில் மட்டும் கிடைத்திருப்பதால் மாணவர்கள் தமது பெறுபேறுகளை உடனடியாகஅறிய முடியாமல் கஷ்டப்பட்டனர்.

மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே பரீட்சையில் சித்தி அடைந்திருப்பதாக அறிய வந்துள்ளது. (அ-10)

## சாராயம் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஆக. 6

சாராய வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த விலை அதிகரிப்பு உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம் அறிவித்திருக்கிறது. விலை அதிகரிப்பு வருமாறு:-

| வகை | பழையவிலை ரூபா: | புதியவிலை ரூபா. |
|---|---|---|
| ★ சாராயம்-எக்ஸ்ரா ஸ்பெசல் | 69-00 | 73-00 |
| ★ தென்னஞ் சாராயம் | 78-00 | 86-00 |
| ★ வி. எஸ். ஓ. ஏ. | 104-00 | 116-00 |
| ★ இரட்டை வடி சாராயம் | 105-00 | 118-00 |
| ★ பழைய சாராயம் | 93-00 | 105-00 |

(உ-21)

## 10 ஆயிரம்...

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் வாரியாக விண்ணப்பங்கள் வகுத்து எடுக்கப்படுகின்றன.

பெண்களே அதிகளவு விண்ணப்பங்களை அனுப்பியிருப்பதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்:

பெரும்பாலான விண்ணப்பங்களில் தேவையான முழு விவரங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பங்களை வகுக்கும் வேலைகளைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திரு. பெரியதம்பி மேற்பார்வை செய்து வருகிறார். (அ-8)

## இ. தொ. கா...

ஆதரவான துண்டுப் பிரசுரங்கள், அச்சடிக்கும் சாதனங்கள் ஆகியவற்றைப் பொலீஸார் மீட்டெடுத்தனர்.

★ வலஸ்முல்லையில்வியாழனன்று இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார்;

★ வெள்ளிக்கிழமையன்று இரவு ஜா-எலையில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரான லங்கா பெர்ணண்டோ என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டு கொல்லப்பட்டார்;

★ கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களின்போது மாவனலையில் ஐந்து பேரும், ராஜவெலயிம் நான்கு பேரும், மொறட்டுவையில் இருவரும் உயிரிழந்தனர்.

★ கேகாலை மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் ஜே.வி.பி யினர் என்று சந்தேகிக்கப்படும் 3 பேரை (சனி) நேற்றுக் காலை சுட்டுக்கொன்றனர். ஒரு தீவிரவாதி காயங்களுடன் கைது செய்யப்பட்டார்; [உ-எ-21]

## எழுபதுக்கும் அதிகமானோர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேதாவி நடராசா (வயது 31), ஆதி அருணாசலம் சுந்தரேஸ்வரன் (வயது 11), எஸ். சுப்பிரமணியம் (வயது 65), இராசகுரு குண்டக்கா (வயது 36), இராசகுரு செல்வன் (வயது 14), எஸ். இளையபெருமாள் (வயது 70), அமிர்தம் உமாதேவி (வயது 26), எஸ்: சசி (வயது 1), ஈஸ்வரமூர்த்தி இராஜலட்சுமி (வயது 24), கே. சிவனேஸ்வரராஜா (வயது 36), பொன்னம்பலம் ரஞ்சித்குமார் (வயது 26), பொன்னுத்துரை சண்முகலிங்கம் (வயது 45), ஆறுமுகசாமி வண்ணக்கிளி (வயது 28), எஸ். கணேசலிங்கம் (வயது 35), கந்தசாமி மகேந்திரராஜா (வயது 49), கந்தசாமி வேலும்மயிலும் (வயது 45), அருட்சோதி ரவீந்திரன் (வயது 39).

இதேசமயம் வித்தனை கப்பல் கட்டும் தொழிற்சாலையிலும், வல்வை பெற்றோல் நிலையத்திற்கு அண்மையிலும், தீருவிலில் உள்ள வீடு ஒன்றிலும், தீருவில் ஸ்தூபிக்கு அண்மையிலும் அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில் அடையாளம் காணப்படாத பல சடலங்கள் கிடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது;

அந்தச் சடலங்களினால் அப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசியது.

வெள்ளிக்கிழமையன்று ஊரடங்கு நீக்கப்பட்டதை அடுத்து வல்வைப் பகுதி மக்கள் இச்சடலங்களை ஊறணி பொது மயானத்திலும், தீருவில் நினைவு ஸ்தூபிக்கு அண்மையில் உள்ள வெளிகளிலும் எரித்தார்கள்.

எரிந்த சில வீடுகள், வாத்தகநிலையங்கள் ஆகியவற்றிலும் எரிந்த சடலங்களின் எலும்புக்கூடுகளும், அரைகுறையாக எரிந்த சடலங்களும் காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

வல்வைச் சம்பவங்களில் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் பலர் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் பொன்னையா இன்பராஜா (வயது 42), எஸ். ஞானம்பிகை, ஏ. ஸ்ரீதரதேவி (வயது 40), சுப்பிரமணியம் முத்துவேல் (வயது 24), எஸ். மாணிக்கரத்தினம் (பெண்) (வயது 75), ஆர். வசந்தாதேவி (வயது 31), என். இந்திராதேவி (வயது 28), ஆர். இரத்தினதேவி (வயது 6) ஆகியோர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது:

இதேவேளை வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியில் 83 பேர் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் எஸ். வள்ளியம்மை (வயது 75), து.இராசு (வயது 32), எஸ். சிவானந்தம் (வயது 28), மே. பாலகிருஷ்ணன் (வயது 31), எல். சுசிலாதேவி (வயது 40), எஸ். இரவீந்திரன் (வயது 19), எஸ். ஜெயராஜா (வயது 23), எஸ். வசந்தகுமார் (வயது 35) ஆகியோர் பெரும் பாதிப்புற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது;

இதே வேளை இப் பகுதியில் சுமார் 40 வீடுகள் எரிக்கப்பட்டிருப்பதாகவும் —

தியேட்டர்கள், வீடியோ நிலையங்கள், பெற்றோல் நிலையங்கள் உட்பட சுமார் இருபது வர்த்தகநிலையங்கள் எரிந்து சாம்பராகியுள்ள நிலையில் காணப்படுவதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-160)


சாவகச்சேரி
அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
முக்கிய அறிவித்தல்

மேற்படி தேவஸ்தானத்தில் சகல பொறுப்புகளும் பொறுப்பெடுத்து பார்க்கக்கூடிய குருக்களும், பல வேலைக்காரரும் உடனடியாகத் தேவை. நேரில் வரவும்.

இங்ஙனம்
தர்மகர்த்தா
(11755)

BITSMANS INSTITUTES
MANIPAY
89 DEC. O/L
பழைய, புதிய பாடத்திட்டத்திற்கான
DAY CLASS
(பகல் நேர வகுப்புக்கள்)
ஆரம்பம்: 7 - 8 - 89 திங்கள் 8-00 a.m.
(1446)

பெண் ஊழியர் தேவை

எமது தொழிற்சாலையில் பலதரப்பட்ட பகுதிகளில் வேலை செய்வதற்கு பெண் ஊழியர் தேவைப்படுகின்றனர். யாழ்ப்பாணம், நுணாவில் கோயிலாக்கண்டி போன்ற இடங்களிலிருந்து வேலைக்கு வருவோருக்கு வந்து போக வாகன வசதி செய்து தரப்படும், தூர இடங்களில் இருந்து வருவோருக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும். நேர்முகப்பரீட்சை இம்மாதம் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை எமது பணிமனையில் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

முகாமையாளர்,
அன்றீஸ் அன் கம்பனி லிமிட்டெட்,
நாவற்குழி.
[11681]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வத்தம்பி செல்வராணி

திருமதி செலவத்தம்பி செல்வராணி 28 - 7 - 89 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் குலசேகரம் செல்வத்தம்பி (முன்னால் பிரதம கணக்காளர், யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வராஜா (Holland), செல்வக்குமார்(Diploma in English, பல்தொழில் நுட்பக்கல்லூரி கொக்குவில்), செல்வநேசன் (கனடா), காலஞ்சென்ற செல்வானந்தன், செல்வானந்தி (யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவி பரதம் 3 ஆம் ஆண்டு). செல்வரஞ்சினி (உடுப்பிட்டி மகளிர் பாடசாலை க. பொ. த. (உயர்தர மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரது தகனக்கிரியைகள் 28 - 7 - 89 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

தகவல்;
கணவர், பிள்ளைகள்.
"செல்வ கிரி" உடுப்பிட்டி. (11759)

### திரு. ஆறுமுகம் கேசவன்

கல்வியன்காட்டைச் சேர்ந்த ஆறுமுகம் கேசவன் அகாலமரணமானார்.

இவர் ஆறுமுகம் சின்னப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை) யின் அன்பு மகனும், இராசாத்தி, விக்னேஸ்வரி (செயற்கை சினைப்படுத்கல் திணைக்களம், திருநெல்வேலி), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும, யோகராசா (கணக்காளர்), தவக்குமாரன் (சுவிற்ஸர்லாந்து). ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியர், உருத்திரபுரம் ம. வி.) ஆகியோரின் மைத்துனரும், ரம்யா, அனுசயா, அகல்யா, தனுஜா, சோபியா, ஜெகப்பிரதாபன் ஆகியோரின் அன்பு மாமனுருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 06-08-1989 இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணியளவில் ஈமக்கிரியைக்காக இல 372, பருத்தித்துறை வீதி, நல்லூரிலிருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
கி. ஸ்ரீஸ்கந்தராஜா
372, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (11707)

### திருமதி நவமணி இராஜரத்தினம்

திருமதி நவமணி இராஜரத்தினம் அவர்கள் 05-08-1989 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. மதியாபரணம் இராஜரத்தினம் (பொப்புலர் மோட்டோர்ஸ், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியாரும், ராஜகுமார், ஜெயகுமார், விஜயகுமார், சாந்தினி, ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயா, கீதாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா, கண்ணன், தீபன், மோகன், சத்யா ஆகியோரின் அருமைப் பேத்தியும், திருநெல்வேலி வைத்தியர் அமரர் திரு. குருசாமி சரஸ்வதி தம்பதிகளின் அருமைப்புதல்வியும், அமரர் திரு. கு. தனபாலசிங்கம், திருமதி சோமாவதி வெற்றிவேல், திருமதி கனகாம்பிகை பிரால், திரு. கு. மன்னவராஜன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் இருந்து இன்று 06-08-89 காலை 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. ம. இராஜரத்தினம்
(11764)

### திரு. சிதம்பரநாதன் இராமலிங்கம்

(இளைப்பாறிய R. M. P.)

தும்பளையைச் சேர்ந்த திரு. சிதம்பரநாதன் இராமலிங்கம் 5-8-89 இல் சிவபதமடைந்தார். இவர் திருமதி மகேஸ்வரி (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், திரு. சித்திராஞ்சன் (பொலீஸ் இன்ஸ்பெக்டர்,பெற்ரு பொலீஸ்), Dr. சித்திரமோகன் (London) அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி மாரினா (Indian Air lines), Dr. திருமதி சுமித்திரா (London) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திரு. இ. சிதம்பரநாதர் (இளைப்பாறிய தபாலதிபர்). திருமதி சி. உமையாள்தேவி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், திருமதி கமலாதேவி பரஞ்சோதி, திருமதி விஜயலக்ஷ்மி பாலசிங்கம், திரு. சாம்பசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் அவரது இல்லமான 12, மவுண் கார்மேல் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் துண்டி மயானத்திறகு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றார்கள்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி இராமலிங்கம் (மனைவி)
12, மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம். (1455)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06.08-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org